/தனிக்கவனம்/ /இதுமிகமிகஅவசரம்/

**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6.**
**ந.க.எண். 34279/கே/இ3/2018 நாள். 25 .09.2020**

-----

**பொருள்:** பள்ளிக்கல்வி – 2019-20ஆம் கல்வியாண்டு - அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் 10 மற்றும் 12ஆம் வகுப்பு - தமிழ்வழியில் பயின்று தேர்ச்சிபெற்ற சிறந்த மாணவர்கள் - பெருந்தலைவர் காமராஜர்விருது வழங்குதல் – தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பெயர் பட்டியலினை அனுப்பக்கோருதல் – சார்ந்து.

**பார்வை:**

1. அரசாணை (நிலை) எண்.190, பள்ளிக்கல்வி (ஜிஇ1) துறை நாள்.18.08.2017.
2. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந,க,எண் 024787/கே/இ3/2020 நாள் 16.07.2020.
3. அரசு கடிதம் எண் 10820/அதே/2020-1 பள்ளிக் கல்வித்துறை நாள் 18.09.2020.

-------

பார்வை (1)ல் கண்டுள்ள அரசாணையின் படி அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் பயின்று தேர்ச்சி பெற்ற 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பெருந்தலைவர் காமராஜர்விருது மற்றும் பரிசுத்தொகை வழங்கி மாணவர்களின் கல்வி மற்றும் தனித்திறன்களை ஊக்குவிக்கும் திட்டம் 2016-17ஆம் கல்வியாண்டு முதல் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதனைத்தொடர்ந்து 2019-20ஆம் கல்வியாண்டில் மாநிலத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழ்வழியில் பயின்று தேர்ச்சிபெற்ற சிறந்த மாணவர்களை மாவட்ட அளவில் தேர்ந்தெடுத்து காமராஜர்விருது வழங்க பார்வை(1)ல் காண் அரசாணை மற்றும் அரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை எண்.1 முதல் 4 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் தகுதியுள்ள மாணவர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

எனவே 2019-20ஆம் ஆண்டுக்கான காமராஜர்விருது வழங்க தகுதியுள்ள மாணவர்களின் பெயரினை, அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து பெற்று, ஆய்வு செய்து தகுதியுள்ள மாணவர்களை தெரிவு செய்ய வேண்டும்.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட 2019-20ஆம் கல்வி ஆண்டில் 10 வகுப்பு பொதுத்தேர்வு தமிழ் வழியில் பயின்று, தேர்ச்சிபெற்ற 20 தகுதிவாய்ந்த மாணவர்களின் பெயர்பட்டியலையும், 12 வகுப்பு பொதுத்தேர்வு எழுதி தமிழ்வழியில் பயின்று தேர்ச்சிபெற்ற 20 தகுதிவாய்ந்த மாணவர்களின் பெயர்பட்டியலையும், மதிப்பெண் வாரியாக இணைப்பில் கண்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் **09.10.2020-க்குள்** **dsejdv@nic.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவிட்டு, அதன் கையொப்பமிட்ட ஒரு நகலினை இவ்வியக்ககத்திற்கு அனுப்புமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் இப்பொருள் குறித்து பார்வை (3)ல் கண்டுள்ள அரசு கடிதத்தில் விவரங்கள் கோரப்பட்டுள்ளதால் மேற்கண்ட காலஅவகாசத்திற்குள் உரிய விவரங்களை அனுப்புமாறு அனைத்து முன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

**"இது மிக மிக அவசரம்"**

**இணைப்பு**- 1.அரசாணை எண்.190
பள்ளிக் கல்வித்துறை
நாள் 18.08.2017ன் நகல்
2. படிவம்

**ஒப்பம்/-**
**முனைவர்.ச.கண்ணப்பன்**
**பள்ளிக்கல்விஇயக்குநர்**

**பெறுநர்**
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.